நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 220 ஆங்கீரச ஆனி 20 ( 04 . 07 . 1992 ) சனி

## ★ காங்கேசன்துறையிலிருந்து சிங்களத் தொழிலாளர்கள் சொந்த இடம் சென்றனர்

வலி. வடக்கு இராணுவ நடவடிக்கையாலும் சேந்தாங்குளம்- கீரிமலை வீதி மூடப்பட்டதாலும் காங்கேசன்துறையில் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட சிங்களத் தொழிலாளர்கள் தத்தமது ஊர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர், இதனால் தற்பொழுது காங்கேசன்துறைக்கு வந்துள்ள மெரினான் என்ற கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. — 04 ஆம் பக்கம் பார்க்க

# இரு தினங்களின் பின்னர் மீண்டும் புல்லாவெளியில் மோதல் வெடித்தது

## காலையில் இடம்பெற்ற சமரில் 4 கவசவாகனங்கள் சேதம்

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு படையினர் இரு நாள்களின் பின் மீண்டும் முன்னேற முயற்சித்தபோது அங்கு பெரும் மோதல் வெடித்துள்ளது. படையினரை புல்லாவெளிப்பகுதியில் எதிர்கொண்டு புலிகள் கடுஞ்சமர் புரிந்து வருகின்றனர்

நேற்றுக்காலை படையினர் கவசவாகனங்கள், டாங்கிகளுடன் முன்னேற முயற்சித்த போது அவர்களை வழிமறித்துப் புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தனர்

புலிகளின் நேற்றைய கடும் தாக்குதலில் 4 கவசவாகனங்கள் சேதமாக்கப்பட்டன படையினர் தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன

படையினருக்கு உதவியாக விமானப்படையினரின் குண்டு வீச்சுத்தாக்குதலும் கடுமையாக இடம் பெற்றுவருகிறது

படையினர் கடந்தவார இறுதியில் இரண்டு கட்டமாக முன்னேற எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் தமது முயற்சிகளை கடந்த புதனன்று நிறுத்திக் கொண்டனர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ★ புல்லாவெளியில் புலிகள் தாக்கி சேதமான கவசவாகனங்களை படையினர் மீட்கமுடியா நிலை

புல்லாவெளியில் புலிகளின் தாக்குதலினால் சேதமான படையினரின் கவசவாகனங்களை படையினர் மீட்க முடியாது திண்டாடுவதாக தூரத்தில் இருந்து பார்த்தவர்கள் தெரிவித்தனர்

இப்பகுதி மணல் பகுதியாக இருப்பதுவும் படையினரால் மீட்க முடியாததுக்கு மற்றொரு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது

மீதமுள்ள படையினர் மீது புலிகள் தாக்குதல்களை தொடருவதும் மீட்க முடியாததுக்கு மற்றொரு காரணமாகும்

இதனால் குண்டுவீச்சு விமானங்கள் மூலம் இவ்வாகனங்களுக்கு குண்டு வீசி அழிக்கும் நடவடிக்கைகள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது, 15

## ஒந்தாச்சிமடம் எஸ். ரி. எவ். 4 தமிழர்களை சுட்டுக்கொன்றது

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடம் பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 பொதுமக்களின் சடலங்கள் வீதியோரத்தில் வீசப்பட்டிருந்தன

ஒந்தாச்சி மடத்தில் புதிதாக முகாம் அமைத்துள்ள அதிரடிப்படையினரால் இந்த 4 தமிழ் மக்களும் முன்னதாக கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் சுட்டுக்கொலைப் பட்டு நேற்று முன் தினம் வீதியோரத்தில் வீசப்பட்டுக் கிடந்தனர்

இவர்களுடன் சேர்த்து மட்டக்களப்பில் கடந்த 4 நாள்களில் 37 தமிழர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

## ஷெல் தாக்குதல்களால் பயணிகள் திரும்பினர்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஊரியான் பாதையூடாக சென்ற பயணிகள் மீது ஆனையிறவு முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து அவர்கள் தமது பயணத்தைக் கைவிட்டு யாழ்ப்பாணம் திரும்பினர்

பண்டத்தரிப்பு வாசி ஒருவர் ஆனையிறவுபடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தது தெரிந்ததே

நேற்றும் இப்பகுதியை நோக்கி ஆனையிறவில் இருந்தும் இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக கிளிநொச்சியில் இருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்

ஹெலிக்கப்டர்களும் விமானங்களும் இப்பகுதியை வட்டமிட்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது 47

## இணைப்பு நிராகரிப்புக்கு அ. தி. மு. கவும் கவலை

அண்மையில் மதுரையில் நடைபெற்ற அ. தி. மு. க மாநாட்டில் இலங்கைத் தமிழர் தொடர்பான பிரேரணையும் ஒன்று நிறைவேற்றப் பட்டது, அதில் பிரேமதாஸ தமிழ்க் கட்சிகள் சந்திப்பு குறித்தும் பிரஸ்தாபிக்கப் பட்டிருந்தது.

கடந்த 16 ஆம் திகதி தமிழர் கட்சிகளுக்கும் பிரேமதாஸவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது வடக்கு கிழக்கு இணைப்பை நிராகரிப்பது போன்று பிரேமதாஸ பேசியுள்ளார் இது கவலை தருகிறது. என

= 04 ஆம் பக்கம் பார்க்க

## ● எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு போராட்டங்களை அடக்க அரசின் குண்டர் படை

அரசுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்களை நசுக்கவென அரசு குண்டர் படைகளை ஏவுவதாக எதிர்க் கட்சிகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

அண்மையில் நடத்தப்பட்ட ஜனகோஷ எனும் இரைச்சல் போராட்டத்தின்போது நவசமசமாஜக் கட்சி தொண்டர்கள் கைது செய்யப்பட்டது போராட்டத்தில்கலந்து கொண்ட இருவர் படுகொலை செய்யப்பட்டது என்பன அரசு ஏவிவிட்டவர்களாலேயே நடைபெற்றதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது,

பல மாவட்டங்களிலும் அரசு ரவுடிகளை ஏற்பாடு செய்து மக்கள் போராட்டத்தை நசுக்க முற்பட்டாலும் எமது போராட்டம் தொடரும் என சுதந்திரக் கட்சி எம். பி. மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

## ● திருமலையில் 8 விமானப்படையினர் பலி இருவரைக் காணவில்லை

# இராணுவக் காவலை ஊடறுத்து விமானப் படையினர் மீது அதிரடி

திருகோணமலை வேப்பங்குளத்தில் நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 8 விமானப்படையினர் பலியாகினர், 2படையினர் காணாமற்போயினர் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 8.15 மணியளவில் வேப்பங்குளம் வீதியிலுள்ள 4ஆம் கண்டம் விமானப்படை முகாமிலிருந்து சுமார் 30 விமானப்படையினர் ரோந்து புறப்பட்டனர்

விமானப்படையினரின் பாதுகாப்பிற்கென பண்மதவாச்சி 4ஆம் கட்டை இராணுவ முகாம்களிலிருந்து முன் கூட்டியே இராணுவத்தினர் வந்து இவ்வீதியில் காவற்கடமையில் நின்றிருந்தனர்

வழமையாக விமானப்படை ரோந்துக்கு இவ்வாறு இராணுவத்தினர் காவல் புரிவர், சுமார் 150 யார் தூரத்தில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் கைப்பற்றிய ஆயுதங்கள்

திருமலையில் நேற்று விமானப்படையினர் மீது நடந்த தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

○ ரி- 81 துப்பாக்கிகள் - 5

○ இதற்கான மகஸீன் - 28

— 04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992, 07 31ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்

பதவி:

பொதுசுகாதார பரிசோதகர் ( ஒப்பந்த அடிப்படையில்)

சம்பளம்:

ரூபா 3,105/= மாதமொன்றுக்கு நிலையானது

தகைமை:

சுகாதார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பொது சுகாதார பரிசோதகர்களிற்கான பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் தகுதி பெற்ற தினத்திலிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருட அநுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிக்கான விண்ணப்பப்படிவங்களும், இதர விபரங்களும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தாபனக்கிளை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23×10 ச மீற்றர் அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1992 - 07 - 01

07009


## ஆசீர்வாதப்பர் திருநாள்

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் பெருநாள் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6,30 மணிக்கு யாழ். ஆயரின் திருநாள் திருப்பலியுடன் வருடாந்த உற்சவம் நிறைவடையும்.

## மணிவாசகர் குரு பூசை

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்கத்தில் மணிவாசகர் குருபூசை இன்று 4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கவிஞர் சோ. பத்மநாதன் அங்கு விசேட சொற்பொழிவாற்றுவார்.

## குமரன் கிண்ண போட்டிகள்

யாழ் கல்விக் கோட்ட மட்டத்தில் குமரன் வெற்றிக் கிண்ணத்திற்காகப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நடந்த புதன் கிழமை கொழும்புத்துறை இந்துக் கல்லூரி மைதானத்தில், சென்சாள்ஸ் மகா வித்தியாலயத்திற்கும், கொழும்புத்துறை இந்துக் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென் சாள்ஸ் அணி 1;0 கோல் கணக்கில் வென்றது.

நேற்று முன்தினம் கொழும்புத்துறை சென் ஜோசப் அணிக்கும், குருநகர் சென் ஜேம்ஸ் அணிக்குமிடையில் சென் அந்தனீஸ் விளையாட்டரங்கில் இடம்பெற்ற இன்னொரு போட்டியில் சென் ஜேம்ஸ் ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் அடிப்படையில் வென்று இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது. 16

## 49 ஆவது மகாநாடு

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 49 ஆவது வருடாந்த மகாநாடு நேற்று பொரளையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.


## சிறு விளம்பரம்

### திருமண சேவை

நல்லூர் ஒய்வூதியர் சமிகம் சேவை அடிப்படையில் திருமண சேவை ஆரம்பித்துள்ளது. பல தரப்பட்ட தகுதிவாய்ந்த உள்ளூர், வெளியூர் குறிப்புகள் உண்டு நலன்விரும்பிகள் சம்பந்தப்பட்டவர்களின் முழுவிவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளலாம் ஒய்வூதியர் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் தொடர்பு செயலாளர் 52 செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 07005


★ ஏழு தமிழ்க் கட்சிகள் சமர்ப்பித்த

# 4 அம்ச திட்டம் பற்றி பௌத்த குருமாருக்கும் விளக்க முடிவு!

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நான்கு அம்சத் திட்டம் பற்றி விளக்கமளிப்பதற்காக தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் முக்கிய பௌத்த குருமார்களையும் சந்திக்கவுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இந்த சந்திப்பில் 7 தமிழ்க் கட்சிகளினதும் சார்பில் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்

அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் உள்ளிட்ட முக்கிய பௌத்த குருமார்களையும், பௌத்த பேரவையையும் தமிழ்ப் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர்.

ஏற்கனவே இந்த நான்கு அம்சத் திட்டம் பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எதரணியினரையும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து விளக்கமளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

★ கலைஞர் கருணாநிதியின் மனுவை அடுத்து

# தமிழக அரசின் உத்தரவு நீதிமன்றத்தால் இடைநிறுத்தம்!

தடாச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களைச் சிறையில் சந்திக்க விடாது விதிக்கப்பட்ட உத்தரவு செயற்படாதபடி சென்னை உயர் நீதி மன்றம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் உட்பட தடாக் கைதிகளை அவர்களது நெருங்கிய உறவினர்கள் தவிர மற்றையவர்கள் சிறையில் சந்திக்கக் கூடாதென தமிழ்நாடு மாநில அரசு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம் மனுவில் தமிழக அரசின் இந்த உத்தரவை இடைநிறுத்தி வைக்குமாறு கலைஞர் கோரியிருந்தார்.

மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தடாக் கைதிகளைச் சிறையில் சந்திக்கக்கூடாது என தமிழக அரசு இட்ட உத்தரவை இடைநிறுத்தி வைப்பதாக அறிவித்ததுடன், பதில் மனுவை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு நான்கு வார அவகாசமும் வழங்கினார்.

## கட்டைக்காடு யுத்தத்தில் துணைப்படையினரும் களத்தில்

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இடம் பெற்றுவரும் மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணைப்படை வீரர்களும் பங்கெடுத்து வருவதாகச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

காயமடைந்த புலிப்படையரர்களுக்குச் சிகிச்சையளிப்பதிலும் மேலும் பல தேவையான உதவிகளைச் செய்வதிலும் துணைப்படை வீரர்கள் பங்கெடுத்துவருகின்றனர்.

## தென்மராட்சியில் இரவு வேளையில் பீப்பாய்க் குண்டுத் தாக்குதல்

தென்மராட்சிப் பகுதியில் கடந்த சில தினங்களாக இரவு வேளைகளில் இடம் பெறும் விமானத் தாக்குதல்களினால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இரவு வேளையில் இப்பகுதியை அடிக்கடி வட்டமிடும் அவ்ரோ விமானமொன்று பீப்பாய்க் குண்டுத் தாக்குதலை குடிமனைகளை நோக்கி நடத்தி வருகிறது

சில தினங்களுக்கு முன்னர் மிருசுவில் - ஆசைப்பிள்ளை ஏற்றம், ஒட்டுவெளிப் பகுதியில் இரவு வேளையில் பீப்பாய்க் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பளைப் பகுதியில் பீப்பாய்க் குண்டுத் தாக்குதலினால் பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

மிருசுவில் - விடத்தற்பளைப் பகுதியில் ஹெலிகப்டர் ஒன்றிலிருந்து பொதுமக்களை நோக்கி கிரனைற் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. எனினும் வயல் வெளியினுள் அது விழுந்து வெடித்ததினால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

## மஹா சங்காபிஷேகம்

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட துர்க்காபுரம் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலய மஹா சங்காபிஷேகம் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஸ்ரீ சாந்தாக்குருக்கள் கிரியைகளை நடாத்தி வைப்பார்.

## சிறுவனுக்கு பரிசு

பெறுமதிமிக்க 104 புராதன நாணயங்களைச் சிறுவன் ஒருவன் கடந்த புதன்கிழமை புத்தளையில் நடைபெற்ற 'கம் உதாவ' விழாவின்போது ஜனாதிபதியிடம் கையளித்தான்

இச்சிறுவனுக்கு 1000 ரூபா ரொக்கப் பணமும், தங்க முலாம் பூசப்பட்ட "சிற்றிசன்" கைக்கடிகாரமொன்றும் ஜனாதிபதியினால் பரிசாக வழங்கப்பட்டன.

## ஆசிரியைக்குப் பாராட்டு

புத்தூரில் உள்ள கல்லூரி ஒன்றின் ஆசிரியை ஒருவர் தமது முன்மாதிரியான நடத்தையால் எல்லோருடைய பாராட்டையும் பெற்றுள்ளார்.

நோயுற்ற மாணவர் ஒருவர் வகுப்பறையை அசுத்தப்படுத்தியிருக்கின்றார் அந்த அசுத்தத்தை யாரும் அகற்ற முன்வராத நிலையில் தாமே அக்கழிவை அகற்றியதோடு வகுப்பறையையும் கழுவித் துப்புரவு செய்துள்ளார்.

இது பற்றி கேள்வியுற்ற பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் ஆர். எஸ். நடராசா அவ் ஆசிரியைக்கு எழுதிய பாராட்டுக் கடிதத்தில் "உம்மையிட்டு உமக்குப் பயிற்சி அளித்த கலாசாலை நியாயமான பெருமை அடைகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

(06)

## வறிய சிறுவர்களுக்கு தலா 2000 ரூபா வைப்பில்!

தென் பகுதியிலுள்ள வறிய சிறுவர்களுக்காக ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாச தலைமையில் இயங்கும் சேவா வனிதா இயக்கம் இரண்டு கோடிரூபாவை மக்கள் வங்கியில் வைப்பிலிட்டுள்ளது

தெரிவு செய்யப்பட்ட 10 ஆயிரம் வறிய சிறுவர், சிறுமியருக்கு தலா இரண்டாயிரம் ரூபா என்ற கணக்கில் இத்தொகை வைப்பிலிடப்படவுள்ளது.

10 வருடங்களின் பின்னர் இச்சிறுவர், சிறுமியர் வங்கியிலிருந்து இப்பணத்தை வட்டியுடன் மீளப்பெறலாம்.


## காலமானார்

### செல்லத்துரை ஆறுமுகரத்தினம்

கொழும்பு, வெள்ளவத்தை ஈ ஏ கூரே மாவத்தை 48ஆம் இலக்கத்திலிருந்த முன்னாள் துறைமுகக் கூட்டுத்தாபன அதிகாரி திரு. செல்லத்துரை ஆறுமுகரத்தினம் காலமானார். அன்னாரின் மரணச்சடங்குகள் 18-06-92ல் கொழும்பில் நடைபெற்றது.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (பொறியியலாளர் கரவெட்டி வடக்கு) அவர்களின் மூத்த புதல்வரும் டொக்லியின் அன்புக் கணவரும், ஜெயரத்தினம், நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகசபாபதியின் மாமனாரும் உரோகித்குமார், பிரியதாயினி ஆகியோரின் பேரனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

30/2 கொறிஸ் வீதி,
கொழும்பு 4.

தகவல்
எஸ். ஜெயரத்தினம்

07004



## அறிவித்தல்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் 1. 07. 1992 முதல் 4/1, சம்பியன் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதை சகல அங்கத்தவர்கட்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மு. சி சண்முகராசா
செயலாளர்

4/1, சம்பியன் வீதி,
கொக்குவில்,

07010

## தெரிவுக்குழு யோசனைகள் ஜனாதிபதி செயலகத்தினதே

# அரசின் இரட்டை அணுகுமுறையும் இரட்டை வேடமும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சியுடன் எழுந்த அரசியல் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு வழமைபோல இனப் பிரச்சினையைப் பாவித்தது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பதாக பயமுறுத்தியது.

இதை நிஜமென நம்பிய தமிழ்க்குழுக்கள் சுதந்திரக் கட்சியை 'சமாளித்து' தெரிவுக்குழுவுக்கு கொண்டு வரும் பொருட்டு அக்கட்சியின் தலைவியையும் ஏனையோரையும் சந்தித்தன. பகிஷ்கரிப்பு தற்காலிகமானது எனத் தெரிவித்த சுதந்திரக் கட்சி அரசாங்கக் கட்சியை எதிர்க் கட்சியை அனுசரித்து பாராளுமன்ற நடவடிக்கைகளை நடத்தும்படி வேறுமாறு தமிழ்க் குழுக்களைக் கேட்டுக் கொண்டது.

இதற்காக தமிழ்க்குழுக்கள் ஜனாதிபதியைச் சந்திக்க சந்தர்ப்பம் கோரியதன் பேரில் ஜூன் பதினைந்தாம் திகதி சந்திப்பு நிகழ்ந்தது.

ஜனாதிபதியை தமிழ்க் குழுக்கள் சந்திக்கபோது இரு பெரிய சிங்களக் கட்சிகளும் தத்தமது உயர்மட்டத் தலைவர்களுடாக தமது பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டன. சுதந்திரக் கட்சி பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் மீண்டும் பங்கு பற்றுவதென முடிவெடுத்து விட்டது.

ஆக, தமிழ்க் குழுக்கள் சோகலி, பகிஷ்கரிப்பை கைவிடுவது என்ற நிலைமை சுதந்திரக் கட்சியும் எதிர்க்கட்சிகளை அனுசரித்துப் போவது என்ற நிலையை ஐ.தே.கவும் நாசுக்காகவே தீர்த்துக் கொண்டன. இது சிங்கள இனத்தின் தமிழர் விரோத கொள்கையில் அவர்களுக்குள்ளே உள்ள ஒற்றுமையை தெளிவாகக் காட்டுகிறது.

தமது நாலு அம்சக் கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டவே தமிழ்க்குழுக்கள் ஜனாதிபதியை ஜூன் பதினைந்தாம் திகதி சந்தித்தன.

ஆனால் ஜனாதிபதியோ அப் பொறுப்பைப் பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் போட்டுவிட்டு வடக்கு-கிழக்கு இணைப்பும் மற்றிய விடயத்தில் ஐ.தே.க. தேசிய விஞ்ஞாபனத்தைச் சுட்டிக்காட்டினார்.

எனினும் தெரிவுக்குழு முடிவை ஏற்றுக்கொள்வதற்கு தாம் தயார் எனக் கூறிவிட்டு குழுவில் பெரும்பான்மையாக அங்கம் வகிக்கும் தமது கட்சி உறுப்பினர்களை தெரிவுக் குழுக் கூட்டங்களில் நிச்சயமாக பங்குபற்றும்படி பணித்தார்.

இக்கட்டத்தில் ஜனாதிபதி மிகவும் முரண்பாடான நிலைப்பாட்டையே எடுத்ததை கவனிக்கலாம்.

இவை இப்படியிருக்க பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வுகள் திடீரென ஜூன் பதினேழாம் திகதிக்கு முன் போடப்பட்டு தெரிவுக் குழுவின் 'ஆலோசனைகள்' என்று நான்கு பக்க ஆலோசனைப் பத்திரம் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு கையளிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைகளின் கர்த்தா யார் என்பது தமிழ்க் குழுக்களுக்குத் தெரியவேயில்லை. அதைப்பற்றி அவர்கள் இருபத்தியிரண்டாம் திகதி சந்தித்தபோது ஆராய்ந்தும் பார்த்தனர்.

ஆனால் இந்த ஆலோசனைகள் ஜனாதிபதி செயலகத்தினால்தான் தெரிவுக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதனாலேதான் தெரிவுக்குழு அவசரமாகக் கூடியது. வடக்கு- கிழக்கு இணைப்பில் முழுத் தமிழினமும் ஒரே குரலில் பேசுகிறது என்பதைத் தெரிந்து கொண்டேதான் இந்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆகவே ஜனாதிபதி மட்டத்திலும், அவரது அரசாங்க மட்டத்திலும் தமிழினத்தின் அடிப்படைக் கோரிக்கையான பாரம்பரிய தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளும் எண்ணம் இல்லை என்பது தெளிவு.

இதனால்தான் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் இராணுவ மற்றும் அரசியல் வழிகளில் இரட்டை அணுகுமுறை அடிப்படையில் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு முயல்வதாகக் கூறியுள்ளார்.

இதன் மூலம் தமிழர்கள் மீது தாம் விரும்பிய தீர்வொன்றை இராணுவ ரீதியில் திணிக்கவே அரசு முயல்வது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரச பயங்கரவாதத்திற்கும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும் உலகப் பெயர் பெற்ற இஸ்ரேல் எவ்வாறு நடந்து கொள்ள முனைகிறது என்பதை சிங்கள இனம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தற்போது நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தொழிற் கட்சித் தலைவர் யிற்சாக் றாபின் பாலஸ்தீனர்களுக்கு தன்னாட்சி வழங்கப் போவதாக அறிவித்துள்ளார். அவரின் அறிவிப்பின்படி பாதுகாப்பு, பந்தோபஸ்து வெளிவிவகாரம் தவிர்ந்த எல்லா அதிகாரங்களும் பாலஸ்தீன தன்னாட்சி அமைப்புக்கு வழங்கப்படும்.

இந்த அறிவிப்போடு ஒப்பிடுகையில் தமிழ்க் குழுக்களின் கோரிக்கைகள் மிகவும் குறைவானதே. அவை பேனிராகரிக்கப்படும் நிலையில் புதிய பிக்குகளையும் ஏனையோரையும் தொடர்ந்து சந்திப்பதில் எதுவித பலனும் ஏற்படாது.

சிங்களப் பேரினவாதத்தின் இனவாதக் கொள்கையை உலக அரங்கில் அம்பலப்படுத்த தமிழர்கள் முனைய வேண்டும் இனி அதுவே சாலரதும் சரியான பணி. அப்படிச் செய்வதன் மூலம் கென்யா மீது விதிக்கப்பட்டது போன்ற பொருளாதார உதவி முடக்கத்தை சிறிலங்கா மீது உதவி வழங்கும் நாடுகள் அமுல் செய்யும் நிலையை உருவாக்க வேண்டும்.

**எஸ். ஜி. எம்.**

---

★ சோதிடர்கள் ஆருடம்

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில்

### ரோஸ்பெரோட்டுக்கே வெற்றி வாய்ப்பு

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ச் புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடும் ரோஸ் பெரோட்டே வெற்றி பெறுவார் என பல சோதிடர்களும் ஆருடம் கூறியுள்ளனர்.

கிரகங்களின் சேர்க்கைகள் இதனைக் காட்டுகின்றன என்று நேற்று முன்தினம் சிக்காகோவில் கூடிய சோதிடர்கள் தெரிவித்தனர்.

ரோஸ்பெரோட்டை ஜனாதிபதி புஷ் கடுமையாகத் தாக்கிப் பேசி வருகிறார். "ரோஸ்பெரோட் அமெரிக்காவுக்குத் தலைமை வகிக்க முடியாத ஒரு பைத்தியக்காரன்" எனவும் புஷ் அண்மையில் கூட்டமொன்றில் சாடினார்.

## புதன்கிழமை மோதலில் 16 படையினருக்கு படுகாயம்

"பலவேகய - II" இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமை தெரிவித்துள்ள போதிலும் கட்டைக்காடு, புல்லாவெளிப் பகுதியில் கடந்த புதன்கிழமையும் மோதல்கள் தொடர்ந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மோதலில் 16 இராணுவத்தினர் படுகாயமடைந்ததாக இராணுவ வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

ஊரியானுக்கும் புல்லாவெளிக்கும் இடைப்பட்ட பகுதியிலும், முள்ளியான் பகுதியிலும் அன்றைய தினம் கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## யாழ். உணவுக் கையிருப்புப்பற்றி கொழும்பில் அறிக்கை

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதியன்று இருந்த உணவுக் கையிருப்பு பற்றிய அறிக்கையொன்றை கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சு வெளியிட்டது.

இதில் குறிப்பிட்ட திகதியன்று 5798 மெற்றிக் தொன் அரிசியும், 4000 மெற்றிக் தொன் கோதுமை மாவும் 1803 மெற்றிக் தொன் சீனியும் யாழ் மாவட்டத்தில் கையிருப்பில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேர அட்டவணைப்படி ஓடத்தவறின் அனுமதிப்பத்திரங்கள் இரத்தாகும்

மேற்கு மாகாணத்தில் பஸ் சேவைகளை முற்றாகப் புனரமைக்க மேல் மாகாணசபை தீர்மானித்துள்ளது.

இதன்படி இனிமேல் நேர அட்டவணையின்படி சேவையாற்றாத பஸ்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ்களின் ஒழுங்கு விதிகளை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறும், தவறின் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் மேல் மாகாண போக்குவரத்து அதிகாரசபை பஸ் உரிமையாளர்களைக் கேட்டுள்ளது.

## மாவட்ட வைத்திய சாலைகளுக்கு மேலதிக மருத்துவ ஊழியர்கள்

சகல மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கும் மேலதிக மருத்துவ உத்தியோகத்தர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் புத்தளையில 'சம்உதாவ' விழாவில் உரையாற்றுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்,

☐ அங்கீகரிக்கப்பட்ட தகைமை இல்லாத மருத்துவ சேவைகளை வழங்குவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

☐ அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும், கிராமிய வைத்திய நிலையங்களுக்கும் அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படும்.

ஆகிய தகவல்களையும் அமைச்சர் அங்கு தனதுரையின் போது குறிப்பிட்டார்.

## படுகாயமடைந்த முல்லை, மாணவிகள் அனுராதபுரம் வைத்தியசாலையில்

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவிகள் பாடசாலையிலிருந்து வீடு திரும்புகையில் வான் ஒன்றினால் மோதப்பட்டு படுகாயமடைந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இவ்விரு மாணவிகளும் முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வெளிவாரிப் பதிவுக்கு விசேட சலுகை கிடைக்கும்

யாழ். பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்புப் பிரிவில் கலைமுதல்/வர்த்தக முதல் கற்கை நெறிகளுக்குப் பதிவு செய்வதற்கான முடிவு திகதி இன்றாகும்.

எனினும் 1990 க.பொ.த. உ.த பரீட்சை (ஆகஸ்ட், ஏப்ரல் 91) பரீட்சை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதி முடிவாகியதும் பதிவு செய்வதற்கான அனுமதி விசேடமாக வழங்கப்படுமென வெளிவாரிப் பட்டப்படிப்பு இணைப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

### மடு உற்சவம்

மடுமாதா தேவாலய ஆடி மாதத் திருநாள் 2 ஆம் திகதி நடைபெற்றது.

மன்னார் ஆயரின் கூட்டுத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் இடம்பெற்றது.

செட்டிகுளம், வவுனியா, மன்னார், திருமலை, யாழ்ப்பாணப் பகுதி அடியார்களே அதிகமாக இத் திருநாளில் கலந்து கொண்டனர்.

---

★ சவானின் ஸ்ரீநகர் விஜயத்தின்போது சம்பவம்

# ரயர் வெடித்த ஓசை கேட்டு ஜவான்கள் சுட்டதில் ஐவர் பலி!

இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் ஸ்ரீநகரில் இரண்டு நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்ட வேளையில் வீதியில் வாகனத்தின் ரயர் ஒன்று வெடித்ததை அடுத்து திகில் கொண்ட பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது 5 பேர் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீநகரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் முஸ்லிம் தீவிரவாதிகள் கைக்குண்டு வீசுவதாக எண்ணிக் கொண்டு கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் 10 பேர் வரையில் படுகாயமுற்றனர்.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் அமைச்சரின் விஜயத்தில் பங்குபற்றவந்திருந்த பொதுமக்களெனத் தகவல்கள் தெரிவித்தன.

## சமாதான முயற்சிகளை மண்டேலா குழப்புவதாகக் குற்றச்சாட்டு

தென்னாபிரிக்காவின் அதிகார பலத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா சமாதான முயற்சிகளைக் குலைத்து வருகின்றார் என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி டிகிளார்க் குற்றம்சாட்டியுள்ளார்.

அரசாங்கம் சண்டையிட விரும்பவில்லை எனவும் ஆனால் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசும் அதன் நேச அமைப்புகளும் தமது கருத்துக்களை மற்றவர்கள் மீது திணிக்க எடுக்கும் எத்தகைய தொரு முயற்சியையும் அரசாங்கம் பொறுத்துக் கொள்ள மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

● யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தகவல்

# அகதிகளின் தேவைகளை பூர்த்திசெய்வதில் சில சிரமங்கள் ஏற்படத்தான் செய்கிறது

(நமது நிருபர் யே. நேசயேசுதாசன்)

"யாழ் மாவட்டத்தில் மட்டும் தற்போது 58,000 குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர் இவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, தங்குமிடம் என்பவற்றை உடனடியாக பெற்றுக்கொடுப்பதற்கு ஒழுங்குகளை செய்வதில் சிரமங்கள் ஏற்படத்தான் செய்கிறது". இவ்வாறு யாழ் அரச அதிபர் கா மாணிக்கவாசகர் எமது சிறப்பு நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில் மக்களின் இன்னல்கள் குறித்தும் சேதங்கள் குறித்தும் அரசுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்கிறீர்களா அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என அரச அதிபரைக் கேட்டபோது பொது மக்கள் மீதான, சொத்துகள் மீதான, தாக்குதல் நடைபெறும் போது நான் உடனுக்குடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக கொழும்புடன் தொடர்பு கொண்டு விளக்குவேன் தருந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக கொழும்பிலிருந்து பதில் கிடைக்கும்" என்றார் யாழ் அரச அதிபர்.

யாழ் மக்களின் கஷ்ட நிலை குறித்து அண்மையில் ஜனாதிபதியை நேரடியாக சந்தித்து பேச்சு நடத்தியிருந்தீர்கள் இதனால் பலன் ஏதும் ஏற்பட்டதா எனக் கேட்ட போது, "ஜனாதிபதியுடன் அரைமணி நேரம் பேச்சு நடத்தினேன் நிலைமைகளை விளக்கினேன் ஜனாதிபதி பல விடயங்களில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். இந்நடவடிக்கைகளை அரசு தாமதப்படுத்தாவிட்டால் எனது முயற்சியில் பலன் இல்லை என்றே கூறலாம்" என்றார்- 17

## வீரச்சாவு

திருமலையில் நேற்று விமானப்படையினர் மீதான அதிரடியில் லெப் நீலவாணன் (பா) பாலச்சந்திரன் சாம்பல்தீவு வீரச்சாவு எய்தினார்.

## ஆனையிறவில் ஷெல் தாக்கு

ஆனையிறவு இராணுவமுகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று இயக்கச்சி பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கட்டைக்காடு வெற்றிலைக்கேணி இராணுவத்தினரும் புல்லாவெளி பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. 47,15

## நீர்கொழும்பு பகுதியில் 75 தமிழர்கள் கைது!

நீர்கொழும்புப் பகுதியில் மேலும் பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் வரை அப்பகுதியில் சுமார் 75 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், தமிழ் யுவதிகள் சிலரும் இவர்களுள் அடங்குவர், கைதானோர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் வத்தளைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு பொலிஸ் பகுதியில் நிறுவப்பட்டுள்ள விசேட பொலிஸ் பிரிவு தமிழர்கள் வதியும் பகுதியில் திடீர் சோதனை நடத்தி சந்தேகத்திற்கு இடமான தமிழ் இளைஞர்களை கைது செய்து வருகின்றது.

## பளையில் குண்டுவீச்சு இரு வயோதிபர்கள் மரணம்

நேற்று மாலை 5 30 மணியளவில் பளை - வண்ணாங்கேணி என்ற இடத்தில் இரு ஹெலிகப்டர்கள், அவ்ரோ வட்டமிட ஒரு பொம்மர் இரு குண்டுகளை வீசியது.

இதனால் கிருஷ்ணா மரக்காலையும் அங்கிருந்த வீடும் பலத்த சேதமடைந்தன.

வீட்டினுள் இருந்த வயோதிர் ஒருவர் உடல் சிதறிப்பலியானார் மற்றொருவர் காயமடைந்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு சங்கத்தார்வயலில் - கோயில் வயல் பகுதியில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சினால் வேலுப்பிள்ளை(74) என்பவர் உயிரிழந்தார் இவரது வீடும் சேதமானது (15)

## ★ கொழும்பு செல்லும் பணிப்பாளர் உயர்தரப்பரீட்சை குறித்து பேச்சு நடத்துவார்

யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் க. பொ. த. உயர்தர பரீட்சையை நடத்துவது குறித்து பரீட்சை திணைக்கள உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்த கல்விப்பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் எதிர்வரும் 15ஆம் திகதியளவில் கொழும்பு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆகஸ்ட் க. பொ. த. உயர்தர பரீட்சை நாடு முழுவதும் ஒரேநேரத்தில் நடத்தப்படும் என கல்வி உயர் கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது (47)

● இராணுவ நடவடிக்கை குறித்து செய்தியாளர்

## கொழும்பு வந்தவர்களின் தகவல் இராணுவ தகவலுக்கு வேறாக உள்ளது

யாழ். குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பலவேகய - 2 இராணுவ நடவடிக்கையில் 40 இற்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி பி ஸி, நேற்று தெரிவித்தது.

குடாநாட்டை துண்டிப்பதில் தமது நோக்கம் நிறைவேறிவிட்டதாக இராணுவம் கூறிவருகின்ற போதிலும் அங்கிருந்து மக்கள் கொழும்பு வந்துள்ளதாகவும் கொழும்புக்கான பி. பி. ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

வந்தவர்களின் தகவல்களிலிருந்து இராணுவம் தாக்குதலை ஆரம்பித்த இடத்திலேயே பெரிய அளவிலான இழப்புகளை சந்தித்துள்ளது என தெரியவருகிறது. இது இராணுவம் தரும் தகவல்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது எனவும் பி பி. ஸி. செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

## மாணவர்களின் மகஜர் ஷெல் தாக்குதலால் திரும்பியது

கடந்த திங்கட்கிழமை அரசாங்க அதிபரிடம் மாணவர்களால் கையளிக்கப்பட்ட மகஜர் நேற்று முன்தினம் ஊரியான் பாதைவரை சென்று மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியது.

இந்த மகஜரை ஜனாதிபதிக்கும் உயர் கல்வி அமைச்சருக்கும் கையளிப்பதற்காக சில செயலக அதிகாரிகள் மூலம் அரச அதிபர் கொழும்புக்கு அனுப்பி வைத்திருந்தார்,

ஆனால் இவர்கள் நேற்று முன்தினம் இரவு ஊரியான் பாதையூடாக பயணம் செய்யும் போது ஹெலியிலிருந்தும் ஆனையிறவு முகாமிலிருந்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் மயிரிழையில் தப்பி தமது கொழும்பு பயணத்தைக் கைவிட்டு யாழ்ப்பாணம் வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 47

★ கொழும்பிலிருந்து அனுமதி கிடைத்ததும்

## யாழ். வங்கிகளின் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்

யாழ் மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் அதிக எழுதுவினைஞர் பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் இருப்பதாக இலங்கைவங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் வங்கி உயரதிகாரி ஒருவர் முரசொலிக்குத் தெரிவித்தார்

அண்மையில் நடைபெற்ற எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்திபெய்தியவர்களை இவ்வெற்றிடங்களுக்கு நிரப்புவது குறித்தும் கொழும்பு தலைமை யலுவலகத்தின் அனுமதி கேட்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி கிடைத்ததும் சித்தியடைந்தவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேபோல மக்கள் வங்கி வெற்றிடத்துக்கும் எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களை நியமிக்க கொழும்பு தலைமையலுவலகத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (47(

### இராணுவம்...

இரு மூன்றாம் இராணுவத்தினரும் வீதியில் நிற்பர்.

நேற்று காலையும் இவ்வாறு 150 பேர் வீதியோரத்தில் இராணுவத்தினர் காவல் நின்றபோது அதனூடாக சென்ற புலிகள் விமானப் படை ரோந்து அணி மீது துணிகர அதிரடியை மேற்கொண்டனர். 8 விமானப் படையினர் பலியாகினர்.

### சிங்களத்...

இக்கப்பலை பருத்தித்துறைக்கு கொண்டுவர யாழ் அரச அதிபர் கொழும்புடன் தொடர்பு கொண்டும் எதுவித பதிலும் கிடைக்கவில்லை எனவும் யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர், 47

## இரணைதீவு மக்கள் குடிநீர் இன்றிக் கஷ்டம்

இரணைதீவில் உள்ள மக்கள் குடிநீர் இல்லாத காரணத்தினாலும் வரட்சி நிலைமை ஏற்பட்டுள்ளதாலும் மிக கஷ்டத்தில் மத்தியில் வசிப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் கூறுகின்றனர்

இதனால் அப்பகுதி மக்கள் இரண்டு மைலுக்கு அப்பால் சென்று குடிநீரை எடுத்துவந்து பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது,

இருந்த போதிலும் சுத்தமான நீர் இல்லாத நிலைமை ஏற்படுவதால் நோய்கள் தொற்றும் அபாய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

கடந்த சிலவாரத்திற்கு முன் இரணைதீவில் இருந்து படகின் மூலமாக வலைப்பாட்டிற்கு குடிநீர் எடுத்துவர எடுத்த முயற்சிகள் பெரும் காற்றுவீசியதன் காரணமாக கைவிடப்பட்டுள்ளன. 55

## லொறி மீதுதாக்கு சிறுவன் காயம்

மிருசுவில் ஆசுப்பிள்ளை ஏற்றம் பகுதியில் நேற்றுமுன்தினம் லொறி ஒன்றை அவ்ரோ, பொம்பர்களும் அவ்ரோவும் மாறி மாறி மேற்கொண்ட குண்டு வீச்சுத்தாக்குதலில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

எனினும் இத்தாக்குதலில் இருந்து லொறி சிறு சேதத்துடன் தப்பிச் சென்றுவிட்டது, இப்பகுதியில் வட்டமிட்ட ஹெலி ஒன்று பரவலாக தாக்குதல் நடத்தியது. 29

### திருமலை...

- ரி- 56 துப்பாக்கி - 01
- இதர்கன மகஸீன் - 02
- ரி-81 எல் எம். ஜி. மகஸீன் - 01
- ஐ எம். ரவைகள் - 856
- ஏ கே, கோல்சர்கள் -06
- ஜே ஆர். குண்டுகள் -07
- ஹெல்மட் - 03
- இராணுவப்பை - 01
- மழைக்கவசம் - 01
- 4 சோடி சப்பாத்துகள்

### இணைப்பு—

அ தி. மு க. வின் மதுரை மாநாட்டு தீர்மானங்களில் ஒன்று கூறுகிறது.

எனவே இந்திய அரசு பிரேமதாஸவுக்கு அறிவுரை கூறி இணக்க நிலையை ஏற்படுத்துமாறும் பிரேரணையில் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,

### பங்குபற்றார்

திட்டமிட்டபடி யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நாளை ஞாயிறு கொழும்பு செல்லமாட்டார் என தெரிவிக்கபடுகிறது

இம்மாதம் 7ஆம் திகதி கொழும்பில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் விசேட கூட்டத்தில் நாட்டில் உள்ள சகல அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

எதிர்வரும் 7ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரும் குமணகப்பல் 15 ஆம் திகதியளவில் மீண்டும் கொழும்பு செல்லும் போது அதில் அரசாங்க அதிபர் பயணமாவார் எனவும் தெரிவிக்கப்பட்டது 47

### இரு...

கடந்த இரு தினங்களாக படையினர் தமது அணிகளை மறுசீரமைத்ததுடன் புதிய இராணுவத்திட்டங்களின் அடிப்படையில் மீண்டும் நேற்றுக்காலை தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஜக்கம் கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 04 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது